# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
## நிர்வாகக் கிளை

144, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

**குறிப்பாணை எண்.047108/215/ஜி.58/ஜி.582/2020-5, நாள். 07.02.2022.**

பொருள்: நிர்வாகம் - வாரிய நிலையாணை எண்.22, (நிர்வாகக்கிளை) நாள் 25.10.2012-ன்படி மஸ்தூர் (பயிற்சி)-ஆக பணிநிரந்தரம் செய்யப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களின் முதன்மை நிர்ணயம் செய்வது தொடர்பாக தெளிவுரை வேண்டப்பட்டது - வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

பார்வை:
1. இவ்வலுவலக கடித எண்.047108/215/ஜி.58/ஜி.582/2020-3, நாள் 23.07.2021.
2. முழு வாரியநிலையாணை எண்.22, (நிர்வாகக்கிளை) நாள் 25.10.2012.
3. இவ்வலுவலக குறிப்பாணை எண்.012267/ஜி.58/ஜி.582/2010-8, நாள் 25.10.2012.

------

பார்வை (1)-ல் காணும் கடிதம் தொடர்பாக பெறப்பட்ட அறிக்கைகளின்படி தெரிவிப்பது யாதெனில், பெரும்பான்மையான வட்டங்களில் வாரியநிலையாணை எண்.22, (நிர்வாகக்கிளை) நாள் 25.10.2012-உடன் இணைக்கப்பட்ட பட்டியலின்படி மஸ்தூர் (பயிற்சி)-ஆக பணியில் சேர்ந்த 4037 பணியாளர்களுக்கு அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களாக வேலைக்கு சேர்ந்த நாளினை கணக்கில் கொண்டு அந்தந்த மின் பகிர்மான வட்டங்களில் முதன்மை வரிசைப்பட்டியல் தயார் செய்து களஉதவியாளர் மற்றும் அடுத்தடுத்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு சில வட்டங்களில் கோட்ட வாரியாக அல்லது மஸ்தூராக பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் அல்லது 20.02.2008/04.03.2008 நாளிட்ட குறிப்பாணைகளின்படி ஒப்பந்த தொழிலாளராக தினக்கூலி அடிப்படையில் பணியில் சேர்ந்த நாளினை கணக்கில் கொண்டு முதன்மைப் பட்டியல் தயார் செய்து பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

---2

2) இதன்தொடர்பாக, ஒரே முறையின் அடிப்படையில் முதன்மை நிர்ணயம் செய்வதன் பொருட்டு முந்தைய கோப்புகளை ஆய்வு செய்ததில் தெரியவருவது யாதெனில், தொழிற்தகராறு சட்டம், 1947 பிரிவு 12(3)-ன் கீழ் 10.08.2007 அன்று தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம் வாயிலாக பணிநிரந்தரம் செய்யப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களாக வேலையில் சேர்ந்த நாளினை கணக்கில் கொண்டு தேர்வுப்பட்டியல் அமைத்து அதனடிப்படையிலேயே முதன்மைப்பட்டியலில் வரிசை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

3) எனவே, 10.08.2007 நாளிட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி பணிநிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு முதன்மை நிர்ணயம் செய்தது போன்று, வாரிய நிலையாணை எண்.22 (நிர்வாகக்கிளை) நாள் 25.10.2012-ன்படி மஸ்தூர் (பயிற்சி)-ஆக பணிநிரந்தரம் செய்யப்பட்ட 4037 பணியாளர்களுக்கும் அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களாக வேலைக்கு சேர்ந்த நாளினை கணக்கில் கொண்டு அந்தந்த மின் பகிர்மான வட்டங்களில் முதன்மைப்பட்டியல் அமைக்கவும் மற்றும் திருத்தம் செய்யவும் உரிய மேற்பார்வைப் பொறியாளர்களை இதன் மூலம் அறிவுறுத்தலாம்.

4) மேற்கூறியவாறு, திருத்தியமைப்பதற்கு பார்வை(3)-ல் தெரிவித்துள்ள 25.10.2012 நாளிட்ட குறிப்பாணையின்படி பிரிவு அலுவலகங்களில் உள்ள ஆவணங்களை ஆய்வு செய்து உரிய மேற்பார்வைப் பொறியாளரால் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்த தொழிலாளியின் அடையாள விண்ணப்பத்தில், வரிசை எண்.8-ல் பணியில் சேர்ந்த நாளாக குறிப்பிட்ட தேதியை அதிகாரப்பூர்வ ஆவணமாக எடுத்துக்கொள்ளலாம்.

5) மேற்கூறிய நடவடிக்கைகள் அனைத்தும் உரிய முறையில் வாரிய பணி விதிகள் மற்றும் எழுத்துத்துறை அல்லாத பணியாளர்களுக்கான நிலையான விதிகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

6) இந்த உத்தரவானது, வாரிய நிலையாணை எண்.22, (நிர்வாகக்கிளை) நாள் 25.10.2012-உடன் இணைக்கப்பட்ட பட்டியலின்படி மஸ்தூர் (பயிற்சி)-ஆக பணிநிரந்தரம் செய்யப்பட்ட 4037 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மட்டும் பொருந்தும். மேலும், ஒப்பந்த தொழிலாளராக வேலையில் சேர்ந்த நாளானது அப்பணியாளர்களுக்குள் முதன்மையை நிர்ணயம் செய்வதற்கு மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

7) பத்தி எண்.3-ல் தெரிவித்துள்ளவாறு, முதன்மைப்பட்டியலில் திருத்தம் செய்யும் பட்சத்தில் ஒரு சில வட்டங்களில் களப்பணியாளர்கள் ஒரே பணிநிலைகளில் இல்லாமலும், காலிப்பணியிடங்கள் இல்லாமலும் ஏற்படும் நிர்வாகச் சூழ்நிலைகளில், சம்மந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் தெளிவான மற்றும் விரிவான விபரங்களுடன் இவ்வலுவலகத்தில் தனியாக தெளிவுரை பெறப்பட்டபின் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு :

25.10.2012 நாளிட்ட குறிப்பாணையின் நகல் (5 பக்கங்கள்)

இரா.கிருஷ்ணமூர்த்தி
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

பெறுநர் :-

உரிய மேற்பார்வைப் பொறியாளர்கள்.

நகல் : 1. உரிய தலைமைப் பொறியாளர்கள்.
2. பணித்தொகுதி அலுவலர்/ செயலாக்கம், நிர்வாகக் கிளை.
3. இருப்புக் கோப்பு.

// அனுப்பப்படுகிறது //

ச. ஈஸ்வரி 7/2/22

(ச. ஈஸ்வரி)
பணித்தொகுதி அலுவலர்/நீதிமன்ற வழக்குகள்
(ஒப்பந்த தொழிலாளர்)

E:\G.58 section\G.582\bakkiya\2021\memo-tamil.doc